# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 8 பிப்ரவரி இதழ் - 2




வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. நான் என்ன செய்ய வேண்டும்? 1
2. தேற்றரவாளனின் வாக்குத்தத்தம் 7
3. பெண்கள் பகுதி 12
4. எங்களை அறிமுகப்படுத்துகிறோம் 15
5. மனிதனுடைய கேள்விகளுக்கு தேவனுடைய பதில்கள் 20
6. கிறிஸ்துவை பின்பற்றி நட 24
7. யெகோவா சாட்சிகள் 30

THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pute New Testament Christianity

Vol. 8 FEBRUARY Issue-2

# நான் என்ன செய்ய வேண்டும்?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நியாய விசாரணை செய்த ஆளுநர் பொந்தியு பிலாத்து, . . . "யூதருடைய இராஜாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்ய வேண்டும்"? என்று கேட்டான் (மாற்கு 15:2)

ரோமப் பிரபுக்கள் குலத்தில் தோன்றிய பொந்தியு பிலாத்துவை திபேரியு என்ற ரோமச் சக்கரவர்த்தி. அன்றைக்கு ரோமப் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்த பலஸ்தீனா நாட்டின் யூதேயா மாநிலத்துக்கு ஐந்தாவது ஆளுநராக நியமித்திருந்தான். கி.பி. 26-ல் இவன் ஆளுநராக நியமிக்கப்படுமுன்னர், இவனைப் பற்றி நமக்கு அதிகமாய்த் தெரிந்து கொள்ள முடியவில்லை.

யூதேயா மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பொழுது, ரோமைப் பட்டாளம் உட்பட மாநிலத்தின் முழு அதிகாரப் பொறுப்பும் இவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஒருவனை மரண ஆக்கினைக்கு உட்படுத்தவும், விடுவிக்கவும் கூட அதிகாரம் உண்டு (யோவான் 19:10) அந்நாளில், யூதர்களுடைய உயர் மட்ட சமய சங்கமாகிய சனகரீம் சங்கத்தின் தீர்மானங்கள் கூட இவனுடைய அங்கீகாரம் இல்லாமல் அமுலுக்கு வரமுடியாது. யூத சமயத்தின் உயர்பதவியாகிய பிரதான ஆசாரியனை (தலைமைக் குரு) நியமிக்கவும், தேவாலய வரவு செலவுக் கணக்குகளைக் கண்காணிக்கவும் அதிகாரம் உண்டு. பிரதான ஆசாரியனுடைய விழாக்கால உடுப்புகள் கூட இவனுடைய பாதுகாப்பில் தான் வைக்கப்பட்டிருக்கும். பண்டிகை நாட்களிலும், சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் அவைகளை எடுத்து உபயோகித்து விட்டு, மீண்டும் இவனுடைய பொறுப்பில் வைத்துப் பாதுகாக்கப்படும்.

இவனுடைய ஆட்சியின் போது மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப் பட்டதாகத் தெரியவில்லை. இவன் ஒரு அகங்காரியாகவும், பிடிவாத குணமுள்ளவனாகவும், கோபக்காரனாகவும் இருந்திருப்பான் என்று தெரிகிறது. தேவையில்லாமல் இரத்தம் சிந்தும் கொடியவன் என்றும் தெரிகிறது. லூக்கா 13-ம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களில் சொல்லப்பட்டுள்ள சம்பவம் இவனுடைய அராஜகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. இந்நிகழ்ச்சியினால் யூதர்கள் வெகுண்டெழுந்தனர். அந்நாட்களில் கலிலேயாவை ஆண்டு வந்த ஏரோது மன்னனுக்கும் இவனுக்கும் பகை உண்டானதற்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்று சொல்லுவாரும் உண்டு. (லூக் 23:12)

புதிய ஏற்பாடு இவனை ஒரு பலவீனமான பாண்டம், கொள்கைப் பிடிப்பும், நீதியின் மேல் பசி தாகமும் அற்ற ஒரு பச்சோந்தி என்றும், மக்களை மதியாதவன் என்றும் வர்ணிக்கிறது. இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக் கொடுத்தது கூட யூதர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தைக் காட்டிலும், ரோமச் சக்கரவர்த்தியை திருப்திப்படுத்தவும், தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் என்று கருதுவாரும் உண்டு. இவனுடைய இறுதி நாட்கள் சமாதானம் இல்லாமலும் பரிதபிக்கப்பட்டத் தக்கதாகவும் இருந்ததாகவும், தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

இப்படிப்பட்ட கொடியவனிடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நியாய விசாரணைக்கு நிற்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை காலத்தின் கட்டாயமே. அவனுடைய நீதிக்குப் புறம்பான-சட்டத்தையும், நியாயத்தையும் மதியாமல் செய்த நியாய விசாரணையை மறு சீராய்வு செய்து, அவனுடைய பலவீனங்களையும் குறைகளையும் கண்டறிந்து நம்முடைய வாழ்க்கையில் அவ்விதமான தவறுகளைக் களைய முயல்வோம்.

பிலாத்துவினிடத்தில் நல்ல குணங்கள் என்று ஒன்றுமே இல்லையென்று தீர்மானமாகக் கூறிட முடியாது. இயேசு நிரபாரதி என்றும் (லூக் 4:14, 15) அவரைப் பிரதான ஆசாரியர்களும் ஜனத்தின் மூப்பரும் பொறாமையினால் ஒப்புக் கொடுத்தார்கள் என்றும் (மத் 27:17; மாற்கு 15:9) அறிந்து இருந்தபடியால் அவரை எப்படியாவது விடுதலை செய்ய வேண்டும் என்று முயற்சித்தான். பண்டிகை நாட்களில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை செய்ய வேண்டும் அல்லவா? அதைப் பயன்படுத்தி, இயேசுவைக் கண்டித்து விடுதலை செய்கிறேன் என்று (லூக் 23:16) அவரை வாரினால் அடித்து இம்சித்தால் ஒரு வேளை அவர்கள் மனமிரங்கி, விடுதலை செய்விக்க இணங்குவார்கள் என்று எண்ணி, வாரினால் அடிக்க உத்தரவிட்டான். அவைகள் ஒன்றும் பயன்தரவில்லை என்ற

நிலையில் தான் மரணத்துக்கு ஒப்புக் கொடுத்தான். பாவம்', நிர்ப்பந்தம்! அவன் என்ன செய்வான்? என்று சிலர் பரிதாபப்படுவர். ஆனால் நாம் ஒன்றை மறந்து விடக்கூடாது. அவன் என்னையும் உங்களையும் போல பொதுமக்களில் ஒருவன் அல்ல. அவன் கையில் அதிகாரம் இருந்தது. ஒருவனுக்கு நன்மை செய்யத் திராணி இருக்கும்போது, அதைப் பயன்படுத்தாமல் கோழைத்தனமாக எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பது எப்படி நியாயம் ஆகும்? ஊரார் விரும்பவில்லை. அல்லது எதிர்க்கிறார்கள் என்பதால் நீதியின் செங்கோலை வளைப்பது நெறியாகாது. அது சமுதாயத்தைச் சீர்குலைத்துப் போடும். உலகம் பொல்லாங்கனுக்குள் சிக்கிக் கொண்டு தடுமாறிக் கொண்டிருக்கிறது. கொள்கைப் பிடிப்போடும், தர்ம நியாயங்களில் நம்பிக்கை வைத்து, அநியாயத்தை, எதிர்த்து நீதியை நிலை நாட்ட எதிர் நீச்சல் போடும் தைரியமும் மன உறுதியும் தேவை. உயர்ந்த இடத்தில் அமர்ந்திருக்கும் அநேகரிடத்தில் அது இல்லாததால் தான் சமூகம் சீர்குலைந்து கீழ்நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது: நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். சிறைக்குள் இருக்க வேண்டிய பலர் வெளியே பெரிய மனிதர்கள் வேடத்தில் உலா வந்து கொண்டிருக்கிறார்கள், இந்நிலை மாறவேண்டும்.

பிலாத்துவுக்கு இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்பது மெய்தான். ஆனாலும் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிந்து நிரபராதியைக் கொலைக்கு ஒப்புக் கொடுத்து விட்டானே! சில சமயங்களில் நம்முடைய தோல்விக்குக் காரணம், நாம் முயற்சியே செய்யவில்லை என்பதல்ல. போதுமான அளவு முயற்சி எடுத்து தீவிரமாகப் போராடாததுதான் காரணம். நிர்ப்பந்தம் தாங்க முடியாமல் கடமை தவறி விட்டானேயன்றி மற்றபடி அவன் நல்லவன் தான் எனறு யாரும் அவனுக்காக அனுதாபப்படமுடியாது. அதே போல நம்முடைய வாழ்க்கையிலும் சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் நம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறபடியால் நான் இன்னும் பாவத்தில் உழன்று கொண்டிருக்கிறேன் என்று கூறி, நாம் தப்பித்துக் கொள்ளமுடியாது.

அவனுடைய உள்ளத்தில் நியாய உணர்வுகள் படியாமற்போனதுக்கும், சிறந்த பண்புகள் உருவாகாமற் போனதுக்கும் அவனுடைய வளர்ப்பு முறையே காரணம் என்று கூடச் சொல்லலாம். சாலமோனின் நீதி மொழிகள் கூறுவதைக் கவனித்தால் இது உண்மை என்று விளங்கும். "பிள்ளையாண்டான் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்." (நீதி 22:6) என்று கூறுகிறது. ஆம் நண்பர்களே! யோசேப்பும், மோசேயும், யோசுவாவும், தானியேலும் சான்றோர்களாகவும், கொள்கைப் பிடிப்புள்ளவர்களாகவும், தீமைக்கும், பாவத்துக்கும் விலகி நின்று உயர்ந்ததற்கு, அவர்களுக்கு

இளம் பிராயத்தில் போதிக்கப்பட்ட நீதி போதனைகளும், நற்பண்புகளுமே காரணம். ஒழுக்கம் என்பது ஒரு நாளில் கற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. சிறிது சிறிதாக, கொஞ்சம் கொஞ்சமாக பிஞ்சு உள்ளங்களில் செலுத்தப்பட வேண்டும். நாம் நம்முடைய குழந்தைகளுக்குக் கிறிஸ்தவ அறநெறிகளைச் சிறு பிராயத்திலிருந்தே போதிக்கிறோமா? அப்படிச் செய்யாமற் போனால் நாம் அநேக பிலாத்துகளைப் பெற்று நாட்டு நலனைக் கெடுக்கிறோம் என்று பொருள்.

மேலும், அவன் நீதியையும், நியாயத்தையும் கடைப்பிடிப்பதினால் கிடைக்கும் தேவ ஆசீர்வாதத்தை விட மனுஷரால் புகழப்படுவதற்கும் சமுதாய அந்தஸ்துக்கும் அதிக மதிப்புக் கொடுத்தான். (யோவான் 12:43) நியாயத்தைச் செய்வதை விட ஒரு சில மக்களால் நல்லவன் என்று பாராட்டப்படுவதை விரும்புகிற மக்கள் நம்மிடையேயும் கணிசமான பேர் உண்டு. உலகத்தை நேசித்து, ஆத்துமாவை அலட்சியப்படுத்துவதற்கு நாம் தயங்குவதில்லை. அரிசியைக் குப்பையில் கொட்டி விட்டு உமியைப் பத்திரப்படுத்தி வைக்கிற இச்செயலை நாம் என்று கைவிடுவோமோ! "மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?', (மத் 16:26) என்று இயேசு பெருமான் கேள்வியை அறிந்த பிறகும் நம்மை மாற்றிக் கொள்ள விருப்பமில்லாமல் காலம் கடத்துகிறோம். எந்தப் பொருளுக்கும் ஒரு விலையுண்டு. அப்படியிருக்க, நீங்கள் விலை ஒன்றும் கொடுக்காமல் நல்லவன், நீதிமான் என்ற பெயரை எப்படிச் சம்பாதிக்க முடியும்? பிரச்சனை, எதிர்ப்பு இல்லாமல் இருந்தால் நான் கிறிஸ்தவன். உபத்திரவம் சிக்கல் என்று வந்தால் நான் வளைந்து கொடுப்பது தான் விவேகம். நான் பேதுருவைப் போல ஒரேயடியாய் மறுதலிக்க வில்லையே ஆலயத்துக்குச் செல்கிறேன். வேதம் வாசிக்கிறேன், பல ஊழியர்களுக்குக் காணிக்கை அனுப்புகிறேன். படிக்கிறேனோ இல்லையோ, இரண்டு மூன்று பத்திரிக்கைகளுக்குச் சந்தா அனுப்புகிறேன். ஆனால் ஒன்று : சில விக்கிரகங்களைப் பூஜை அறையில் வைத்திருக்கிறேன். ஆனால் வணங்குவதில்லை. சும்மா, பூஜைபோடுகிற மாதிரி நடிப்பேன். என்ன செய்யட்டும்! என் சூழ்நிலை அப்படி இல்லையென்றால் பிழைப்பு நடக்காது என்று சமாதான விளக்கம் கொடுப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தானியேல் புத்தகத்தை ஜெபத்துடன் வாசித்து தியானிக்க ஆலோசனை கூறுகிறேன்.

மற்றவர்கள் ஒத்துழைத்தால், இசைந்து வந்தால் என்னால் நன்மை செய்ய முடியும் என்பது போல் பிலாத்து நடந்து கொண்டான். யூதர்கள் ஒத்துக் கொடுத்திருந்தால் இயேசுவை விடுதலை செய்திருப்பேன் - நியாயம் என்பது ஒரு நித்திய நெறி, அதற்கு

மெஜாரிடி தேவையில்லை. ஆகையால், மற்றவர்கள் இசைந்து வராததினால் தான் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று புலம்பாதே. தீமை செய்யத் திரளான ஜனங்களைப் பின்பற்றாதே என்ற தேவ எச்சரிப்பைக் கவனி. (யாத் 23:2) "நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்" என்று கூறிய யோசுவாவின் சீரிய முன் மாதிரி எப்பொழுதும் உங்கள் கண்முன் நிற்கட்டும்; உங்கள் காதுகளில் ஒலிக்கட்டும். (யோசு 24:15)

பிலாத்து தான் செய்ய வேண்டிய கடமையைத் துணிந்து செயலாற்றாமல் வேறு எவரையாவது பொறுப்பாக்கி விட்டு தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணினான். அதனால் இயேசுவை சம்பந்தமில்லாத ஏரோதிடமும், பொறாமை நிறைந்த யூதச் சமயத் தலைவர்களிடமும், அவர்களால் ஏவி விடப்பட்ட மக்கள் திரளிடமும் பிரச்சனையைக் கொண்டு சென்றான். அதன் மூலம் அவனுடைய மனக்குழப்பத்தை வெளிக் காட்ட முடிந்ததேயன்றி பெரிய நன்மை ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. கையைக் கழுவிக் கொண்டான், உண்மை. ஆனால் அவன் மனதில் படிந்து கிடந்த நியாயக் கேட்டைத் துடைத்துப் போட முடியவில்லை.

பிலாத்து, இயேசு நிரபாரதி என்று தெரிந்து கொண்டு, கசையடிகொடுத்துத் துன்புறுத்துவதின் மூலம் மக்களின் இரக்கத்தைப் பெற்று சமரசம் செய்ய முற்பட்டான். நீதியும், சத்தியமும் சேதமடையாமல் சமரசப்படுத்த முடியாதவைகள். அப்படிச் செய்ததால் நீதி வளைந்து போனது; சத்தியம் புரண்டு போனது. விளைவு? நிரபராதி மரத்தில் தொங்கினார். நாம் கூட சத்தியத்தையும், உலகியல் கோட்பாட்டையும் சமரசப்படுத்த முயலுகிறோம். விளைவு? மனிதரிடம் மதிப்பு; கர்த்தரிடம் கசப்பு.

பிலாத்து உலக சிநேகத்தை நீதிக்கு மேலாகக் கருதினான். "இயேசுவை விடுதலை செய்தால் நீ சீசருக்கு நண்பன் அல்ல என்று மிரட்டியவுடன் பணிந்தான். எது பெரிது? தேவ நீதியை நிறைவேற்றுவதா? சீசரின் (சககரவர்த்தியின்) சபாஷா?" ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். (மத் 10:28) என்கிற சத்தியங்களையும் பிலாத்து கற்பிக்கப்பட்டிருந்தானானால் அவன் தீர்ப்பு வித்தியாசமாக இருந்திருக்கும்; உலக வரலாறும் திசை மாறியிருக்கும்.

நியாயத்தைச் செய்வதற்குப் பிலாத்துக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தவறி விட்டான்.

அவன் மனைவி உதவிக்கு வந்தாள் (மத் 27:19.) இயேசுவே கூட ஒத்துழைத்தார். ஏரோதிடம் பேசாது மௌனம் சாதித்தவர், பிலாத்துவோடு பேசினார். ரோம சாம் ராஜ்யத்துக்கு எதிராக ஒரு

யூத இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க முனைகிறாரோ என்ற பயத்தைப் போக்க "என்னுடைய இராஜ்ஜியம் இந்த உலகத்துக்குரியதல்ல என்றார்" (லூக் 23:3, 9; யோவான் 18:36).

வாழ்க்கையில் முக்கியமான தீர்மானம் எடுப்பதற்கு மற்றவர்களுடைய ஆலோசனையைக் கேட்டுக் கொண்டிருந்தான். "நான் இயேசு கிறிஸ்துவை என்ன செய்ய வேண்டும்? இந்தக் கேள்விக்கு நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக பதில் அளிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன். எதற்கும் என் பெற்றோரைக் கலந்து கொண்டு முடிவு சொல்லுகிறேன். என் சகோதரனுடைய அபிப்பிராயம் வேறு விதமாக இருக்கிறது என்று தயங்குபவர்களை நாம் பார்க்கிறோம் ஆனால் இரட்சிப்பு சம்பந்தப்பட்ட விஷயத்தில் தேவன் ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கணக்குக் கேட்பார் (ரோமர் 14 : 12; 2 கொரி 5:10) ஆகவே, நீ தீர்மானி, நீ பதில் அளி! மற்றவர்களைச் சார்ந்து நிற்காதே. நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டவர்களுக்குப் பேதுரு அளித்த பதில் : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும். பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று பதில் அளித்தான். (அப் 2:37, 38) இன்றைக்கும் என்றைக்கும் அதுவே பதில். நீங்கள் அப்படிச் செய்யாமல் இருந்தால் இன்றே சிந்தி, செயல்படு.

**E.Z. செல்வநாயகம்**

**"திருமறை ஆசான்" இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. E.Z. செல்வநாயகம் அவர்கள் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து 9.2.95-வுடன் இரண்டு ஆண்டுகள் நிறைவு பெறுவதால் அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப் படுகிறது.**

**- ஆசிரியர்**

7

# தேற்றரவாளனின் வாக்குத்தத்தம்

பரிசுத்த ஆவியானவரின் பணி பற்றிய தொடரின் 5வது கட்டுரை இது. பரிசுத்த ஆவியானவரைப் பற்றி மக்களிடையே நிறைந்த தவறான கருத்துக்கள் பரவியுள்ளதால், அவரைப் பற்றியும் அவருடைய பணி பற்றியும் வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை அறிய இந்த தொடர் கட்டுரைகளை வெளியிடும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

சுவிசேஷத்தில், பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளன் என அழைக்கப்படுகிறார். இங்கு தேற்றரவாளனின் வாக்குத்தத்தம் பற்றி நாம் காண்போம்.

பாவிகளை இரட்சிக்க இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். (1 தீமோ 1:15) வீழ்ந்து போனவர்களைத் தேடவும் அவர்களை இரட்சிக்கவும் அவர் வந்தார் என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. (லூக்கா 19:10) இருந்த போதிலும், கிறிஸ்து பாவமற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்து, நல்லவற்றை மட்டுமே செய்து கொண்டு வந்தார் என்பது உண்மையாக இருப்பினும், அவருக்கு எதிரிகள் இருந்தனர், இறுதியாக கொடூரமான சிலுவையில் அறையப்பட்டு மரிக்க இருந்தார் என்பதும் கசப்பான உண்மைகளே. இதை அவர் அறிந்திருந்தார் எனவே அவருடைய ஊழியம் தொடர்ந்து நடைபெறத்தக்கதாக, அப்போஸ்தலர்கள் என அழைக்கப்பட்ட 12 மனிதர்களை அவர் தேர்ந்தெடுத்து, போதித்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, இவ்வுலகிலிருந்து அவர் எடுத்துக் கொள்ளப்பட்டதும், அவருடைய பணியைத் தொடர அவர்களைத் தயார்படுத்தினார். என்றாலும், அவர்கள் தவறுகளைச் செய்யக் கூடிய மனிதர்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனவே, அவர் உபதேசித்திருந்த பல காரியங்களை ஒருவேளை அவர்கள் மறந்து விடக்கூடும் என்பதாலும், அல்லது இவ்வுலகிற்கு அவர் அறிவிக்க விரும்பிய பல சத்தியங்களை அவர்களால் புரிந்து கொள்ள இயலாது என்பதாலும், அவர்கள் நிச்சயமாக சரியாக வழிநடத்தப்படவும், கற்பிக்கப்படவும், அவர் சென்றபின், தேற்றரவாளனை அவர்களுக்கு அனுப்புவதாக வாக்களித்தார்.

இப்போது புதிய ஏற்பாட்டில் யோவான் புத்தகத்திற்கு என்னோடு வாருங்கள். தேற்றரவாளனைப் பற்றி அதில் எழுதப்பட்டுள்ள சில குறிப்புகளை நாம் படிப்போம். அப்போஸ்தலர்களிடம் பேசும் போது, இயேசு கூறினார் : "நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத்

தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன். இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்.'' (யோவான் 14 : 16-21).

தொடர்ந்து, கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் கூறுகிறார் : ''என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று நான் சொன்னதைக் குறித்துக் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்." (யோவான் 14:26-28).

பின்னர், கிறிஸ்து தெளிவாக்குகிறார் : ''பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும் போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்." (யோவான் 15 : 26 - 27). தொடர்ந்து படிக்கும் போது, அவர் கூறுகிறார். ''நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாத படியினாலே

பாவத்தைக் குறித்தும் நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந் தீர்க்கப்பட்டதினாலே நியாயத் தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்துவார். இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார்." - (யோவான் 16:7-16)

இப்பொழுது, மேலே கண்ட எல்லா வசனங்களிலும் கீழ்க்கண்ட உண்மைகள் குறுக்கிடுகின்றன.

1. கிறிஸ்து இங்கே அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார்
2. எனவே, தேற்றரவாளனை அவர்களுக்கு மட்டுமே அவர் வாக்களித்தார், உலகத்திற்கு அல்ல, பிற சீடர்களுக்கும் கூட அல்ல
3. தேற்றரவாளன், பரிசுத்த ஆவியானவர் என அடையாளங் காட்டப்படுகிறார்.
4. கர்த்தர் பரலோகத்திற்குச் சென்ற பின்னர், தேற்றரவாளன் அப்போஸ்தலர்கள் மேல் வரவிருந்தார்
5. தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவர் அவர்களோடு இருப்பார், இயேசு உபதேசித்தவைகளையெல்லாம் அவர்களுக்கு நினைப்பூட்ட உதவுவார், எல்லா சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார், வரப்போகிற காரியங்களை வெளிப்படுத்துவார், பிற மொழிகளில் பேசும் வல்லமையைக் கொடுப்பார், அற்புதங்களைச் செய்யும் சக்தியளிப்பார்.
6. கிறிஸ்து மாத்திரமே அவர்களுக்குத் தேற்றரவாளனை அனுப்ப முடியும்
7. கர்த்தரோடு ஆரம்ப காலத்திலிருந்து இருந்த அப்போஸ்தலர்கள், தேற்றரவாளனோடு, கர்த்தருக்கு சாட்சியாக இருப்பார்கள்.

அப்போஸ்தலர்களின் மேல் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக கர்த்தர் வாக்களித்ததைப் பற்றியும் லூக்கா பேசுகிறார். கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்புக்குப் பின்னர், அவர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானார்: "அவர்களை நோக்கி : மோசேயின் நியாயப் பிரமாணத்திலும் தீர்க்க தரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்த போது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி : எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரில் இருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத் தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார் அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள். ஆமென்". (லூக்கா 24 : 44 - 53).

பின்னர் லூக்கா, இந்தக் காட்சியை அப்போஸ்தலருடைய நடபடிகள் 1ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்ததைத் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதினார். பின்னர், பரிசுத்த ஆவியானவர் அல்லது தேற்றரவாளன் எப்படி அப்போஸ்தலர்கள் மேல் இறங்கினார் என்றும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் அவர்கள் எதைச் செய்வார்கள் என கர்த்தர் கூறினாரோ அவற்றை அவர்கள் செய்யத் தொடங்கினார்கள் என்னும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தில் அவர் சொல்லுகிறார்.

இப்போது, தேற்றரவாளன் யாருக்கு வாக்களிக்கப் பட்டிருந்தார்? சந்தேகமின்றி, அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே. தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவரை யார் அடைந்தார்கள்? மீண்டும், அப்போஸ்தலர்கள் மட்டுமே. 120 பேர் அங்கு கூடியிருந்தார்களே, அவர்களைப் பற்றி என்ன? மீண்டும், பரிசுத்த ஆவியானவரின்

வல்லமையை அப்போஸ்தலர்கள் தவிர வேறு யாரும் பெற்றுக் கொள்ளவில்லை. இன்றும், எவரும் அற்புதங்கள் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெறுவதில்லை. இன்று மாறாகப் போதிக்கின்றவர்கள், ஆவியானவருடைய வார்த்தைகளுக்கே முரணாகப் பேசுகின்றனர். .

**J.C. சோட்**

## மாம்சத்தின் கிரியைகளுக்கு விலகுங்கள்!

**"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங் கமாயிருக்கின்றன; அவையாவன : விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக் கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டங்கள் முதலானவைகளே; இப்படிப் பட்டவைகளை செய்கிறவர்கள் . தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்கு சொல்லுகிறேன்".**

***(கலாத்தியர் 5 : 19 -21)***

### தீர்வு என்ன?

**"ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் . . . ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்ப்டிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை".**

***(கலாத்தியர் 5 : 16, 22-23).***

# ஒழுக்கத்தில் வளர்த்தல்

நம்பிக்கையிருக்குமட்டும் உன் மகனைச் சிட்சை செய். ஆனாலும் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்ப வொட்டாதே. நீதி (19 : 18).

பிள்ளையைத் தண்டியாமல் விடாதே, அவனைப் பிரம் பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவ னை அடிக்கிறதினால் பாதா ளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே (நீதி 23 : 13, 14)

பிரம்பும், கடிந்துகொள்ளு தலும் ஞானத்தைக் கொடுக் கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணு கிறான். (29 : 15).

பிள்ளைகளே, நீங்கள் தகப்பன் போதகத்தைக் கேட்டு, புத்தியை அடையும்படி கவனியுங்கள். நான் உங்க ளுக்கு நற்போதகத்தைத் தருகிறேன். என் உபதேசத்தை விடா திருங்கள்.

நான் என் தகப்பனுக்குப் பிரியமான குமாரனும், என் தாய்க்கு மிகவும் அருமையான ஒரே பிள்ளையுமானவன்.

அவர் எனக்குப் போதித்துச் சொன்னது, உன் இருதயம் என் வார்த்தைகளைக் காத்துக் கொள்ளக் கடவது. என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய்.

ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி என் வாயின் வார்த்தைகளை மறவா மலும் விட்டு விலகாமலும் இரு (4: 1 - 5).

பெற்றோர் - பிள்ளை இவர் களது உறவில் ஒழுக்கம் என்பது பல அம்சங்களை உள்ளடக் கியது. பிள்ளை வளர்ப்பில் தகப்பனும், தாயும் பொதுவாக இணைந்து, கூட்டுப் பொறுப் புடன் செயல்படுகிறார்களா? என்பது மிகவும் முக்கியமானது. தகப்பன் ஒன்று சொல்ல, தாய் தனது மேதாவித்தனத்தைக் காட்டுவதாக நினைத்து, அதற்கு எதிராகச் சொல்ல நிலைமை இப்படி இருக்குமானால், எவ்வளவு குழப்பமும், வேத னையும் குடும்பத்தில் இருக்கு மென்று எண்ணிப்பாருங்கள். தகப்பனைக் காட்டிலும் தாய் குடும்பத்தி இருந்து பெரும் பாலான நேரங்களை குழந்தை களுடன் செலவிடும் வாய்ப்புப் பெறுவதால், ஒழுக்க விஷ யத்தை நடைமுறைப் படுத்தும் விஷயத்தில், தாய்க்கே பிரதான பங்கு உண்டு.

சமீபத்தில் ஒரு மனிதர் இவ்விதமாகச் சொன்னார். "தன்னுடைய பெண் குழந் தைக்கு11/2வயதே ஆகியிருந் தாலும், அவளுக்கு இரண்டு வயதுக்குண்டான எல்லா சேஷ்டைகளும் உண்டு என்று. எதற்கெடுத்தாலும், "இல்லை",

"முடியாது" என்று சொல்லிப் பழகிவிட்டாள். அவள் கேட்பது கிடைக்காவிடில் அடம்பிடிக் கிறாள்" என்றார். அவளை லேசாக தண்டிக்க ஆரம்பித்து விட்டீர்களா என்றதற்கு அவர் இப்படிச் சொன்னார். "இல்லை. முதலாவது நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அவள் புரிந்து கொள்கிறாளா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்" என்றார்.

ஒரு குழந்தை, வேண்டு மென்றே ஒரு தவறைச் செய்ய ஆரம்பிக்கிறது என்றால், அது ஒழுக்கத்தைப் புரிந்து கொள்கின்ற அளவுக்குப் பக்குவ மாகிவிட்டது என்பதுதான் அதன் பொருள்.

அப்பருவத்தில், இதுதான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது, இது விலக்கப்பட்டிருக்கிறது, அதைச் செய்யக் கூடாது, அங்கு போகக் கூடாது என்று அக்குழந்தை தெரிந்து கொள்ளும் அளவில் நாம் எல்லைகளை வரையறுக்க வேண்டும். வயது கூடும்போது அந்த எல்லைகளை விரிவாக் கவும், மாற்றவும் வேண்டும். ஆனால், கொள்கையை ஒரு போதும் மாற்றக்கூடாது. ஒழுக்கம் என்ற கொள்கையை நாம் சரியாக, உறுதியாக நிலைநாட்டிவிட்டால், பிறகு பிள்ளை வளர்ப்பு என்பது பெற்றோர்களுக்கு மிகவும் சுலபமாகிவிடும்.

ஒழுக்க விஷயத்தில், "இல்லை" என்பதும் ஒரு எல்லைதான். சில சமயங்களில் குழந்தை ஏமாற்றம் அடையவும், வெட்கப்படவும் நேர்ந்தால் கூட ஒழுக்கத்திற்கு அவைகள் அவசியமே. வாய்மொழியாகக் கடிந்து கொள்ளுதலும் தேவையானதே. கீழ்ப்படியாத பிள்ளையை, சில பெற்றோர் அவன் மனஸ்தாபப்படும் வரை தனி அறையில் இருக்கச் சொல்வர். சிலர் அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சிலாக் கியங்களை நிறுத்தி விடுவர்.

சில சமயங்களில் வேறு வழிமுறைகளைக் கையாள வேண்டியும் வரும். உங்களுடைய குழந்தை, ஒழுக்க ரீதியாக, ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதி யை எட்டுவதற்கு, எந்த வகையான வழிமுறையைக் கையாளவேண்டுமோ, அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவைகள் தவிர, அவர்களை சரீரப்பிரகாரமாகத் தண்டிக்க வேண்டியும் வரும். அது குழந்தையை நிந்திப்பது அல்ல. அதாவது, குழந்தையை ஈவிரக் கமற்ற முறையில் அடித்து, நொறுக்கி, பல்லை உடைத்து, முதுகில் வரிபோட்டு, கை, கால்களை முறிப்பது அல்ல. அம்முரட்டுத்தனம் எண்ணிப் பார்க்க முடியாதது.

குழந்தையைப் பிடித்து இழுத்துத் தள்ளி, உதைத்துத் தடுமாற வைப்பது ஆபத்தானது. அது மூளையைக் கூட பாதிக்கும். காதோடு சேர்த்து அறைவதும், தலையில் கண்டபடி கொட்டு வதும், அடிப்பதும் கூட ஆபத்தானது. ஒரு முறை ஒரு தாய் தன் மகனைக் கன்னத்தில் அறைந் தாள். அதற்கு மகன் இப்படிச் சொன்னான். "அடிப்பதற்கு இதைவிடச் சிறந்த

இடத்தை கர்த்தர் உண்டாக்கி இருக்கிறார்" என்று. எனவே அவள் அவனை குனிய வைத்து சத்தமாக அடித்தாள்! பையன் சொன்னது சரிதான். நாம் உட்காரும் இடத்தில் அதிகமான சதைப் பிடிப்புள்ளதற்கு அநேக காரணங்கள் உண்டு. ஒரு குழந்தையைத் தண்டித்து, அவனை நல்வழிப்படுத்த, வேகமாக அடிக்க நேர்ந்தாலும் அப்பகுதி குழந்தைக்கு பாதுகாப்பாக உள்ளது.

நீதிமொழிகளில் காணப்படும் பலவிதமான ஞானங்களை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். குழந்தைகள் இளம் வயதில் இருக்கும்போது அவர்களை ஒழுக்க ரீதியாக வளர்க்காதவர்கள், அக்குழந்தையின் அழிவை ஏற்கனவே தீர்மானித்துவிட்டார்கள்" என்று ஞானி சாலமோன் சொல்கிறார். பயிற்சியை ஆரம்பிக்கும் இடமாகிய குடும்பத்தில், ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுப்பதில் குறைவு ஏற்படுமானால், அது பள்ளியிலும், சமுதாயத்திலும், வேலை செய்யும் இடங்களிலும், ஏன் வாழ்க்கையிலும் கூட எதற்கும் கட்டுப்படாதவர்களாக மாறிவிடுவர். பிறகு கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்பதுதான் அவர்கள் வாழ்க்கை முறையாக இருக்கும். பெரும் அழிவுக்குத் தான் அது வழிவகுக்கும் என்பதை சொல்லவும் வேண்டுமோ!

எனவே பிள்ளைகளை ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக வளர்ப்பதில் பெற்றோர்களாகிய நம்மேல் விழுந்த கடமைகளை உணர்ந்து செயல்பட நம் அருமை ரட்சகர் உதவி செய்வாராக!!

**B.B. சோட் R.R. நாயகம்**

## கிறிஸ்தவர்களும், வேதாகம வகுப்புகளும்

**கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைக் கற்றுக் கொள்ள எப்போதும் கூடி வரலாம்.**

**எருசலேமில், முதல் விசுவாசிகள் " ஒரு மனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து (அப். 2:46), தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள். (அப். 5:42). பெரேயா பட்டணத்து யூதர்கள் பாராட்டப்பட்டனர்; ஏனெனில், அவர்கள் " மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு . . . . தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர் . . . (அப். 17 : 11) எபேசுவிலுள்ள சீடர்களோடு, அப்போஸ்தலன் பவுல் " திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக் கொண்டு வந்தான்". (அப். 19 : 9 -10)**

# எங்களை அறிமுகப்படுத்துகிறோம்

***படிக்கும் நேரம் : 10 நிமிடங்கள். இந்த பத்து நிமிடங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றக்கூடும்.***

## கிறிஸ்தவர்களாக மட்டும் இருங்கள்

*நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மட்டும் இருக்க முடியும்! இது வித்தியாசமாக ஒலிக்கிறதா? 300-க்கும் அதிகமான மதப்பிரிவுகள் நம் நாட்டில் இருக்கும் போது, அவற்றில் ஏதாவது ஒரு பிரிவில் உறுப்பினராக இல்லாமல், ஒரு கிறிஸ்தவனாக மட்டும் இருப்பது சாத்தியமற்றதாகத் தோன்றலாம். ஆனால் அது சாத்தியம் என்பது மட்டுமல்ல; உண்மையிலேயே இன்று இலட்சக்கணக்கான மக்கள் (எவ்வித அடைமொழியும் சேர்க்காத) "கிறிஸ்தவர்களாக மட்டும்" இந்நாட்டிலும், பிறநாடுகளிலும் உள்ளனர்.*

## கிறிஸ்துவின் சபையார் :

*நாங்கள் கிறிஸ்தவர்கள் மட்டுமே எனத் தங்களைக் கூறும் இந்த மக்கள் யார்?"கிறிஸ்துவின் சபையாரின்" பிராந்திய சபைகளில் ஒன்றின் அங்கமாக இருப்பவர்களே இவர்கள், குறுகிய நோக்கத்தில் இவ்வாறு அழைக்கப்படவில்லை. மாறாக, கிறிஸ்துவினுடைய சபையைச் சார்ந்தவர்களாக இருப்பதில் தங்கள் விருப்பத்தைக் காட்டுவதே நோக்கமாகும். " . . . . கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16) என வேதாகமம் கூறுகிறது என்றபோதிலும், வேதாகமத்தில் நாம் காணும் சபையை, "தேவனுடைய சபை" (1கொரி 1 : 2),"கிறிஸ்துவின் சரீரம்" (1 கொரி. 12 : 27), "விசுவாச குடும்பத்தார்" (கலா. 6:10), என்றெல்லாம் விவரிப்பதும் முற்றிலும் சரியே. இவைகளும், இன்னும் வேதாகமத்தில் காணப்படும் சபை பெயர்கள் யாவும் இடுகுறி பெயர்கள் அல்ல; ஆனால் இவை அனைத்தும் கிறிஸ்துவுக்கும் தேவனுக்கும் சபையுடன் உள்ள உறவை விவரிக்கும் சொற்றொடர்களாகும்.*

*தனிப்பட்ட முறையில், கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் "கிறிஸ்தவர்கள்" என வேதாகமத்தில் அறியப்படுகின்றனர். " . . . . முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று". (அப். 11:26). "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்". ( 1 பேதுரு 4 : 16). தேவன் அளித்துள்ள இந்தப் பெயரோடு ஒருபோதும் மனிதப்*

பெயர் எதுவும் இணையலாகாது. எல்லா கிறிஸ்தவர்களுக்குள்ளேயும் பெரியவர்களில் ஒருவனாக பவுலும் இருந்தார். என்றபோதிலும், சீடர்கள் "பவுலைச் சார்ந்தவர்கள்" அல்லது "பவுலின் கிறிஸ்தவர்கள்" என அழைக்கப்பட அவர் விரும்பவில்லை. (1 கொரி. 1 : 10 - 17 வசனங்களைப் பார்க்க)

## ஒரு வேற்றுமையான வேண்டுகோள் :

கிறிஸ்துவின் சபையார் ஒரு வித்தியாசமான வேண்டுகோள் விடுக்கின்றனர். கிறிஸ்துவைப் பின்பற்றுவதில், மற்றவர்களோடு பல வழிகளில் நாங்கள் ஒத்துப் போகிறோம். வேதாகமம் முற்றிலுமாக பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டதையும், நம்பிக்கைக்கு ஏற்ற எல்லா காரியங்களிலும் நம்மை வழி நடத்த அது முழுவதும் போதுமானதாக இருக்கிறது என்பதையும் நாங்கள் விசுவாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவை, ஜீவனுள்ள தேவனின் குமாரன் என்றும், அவர் சிந்திய இரத்தமானது நமது பாவங்களுக்குப் பரிகாரமாகும் வல்லமை பெற்றது என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். மரணத்திற்குப் பின்னர், எல்லா மக்களும், இவ்வுலகில் அவர்கள் வாழ்ந்த விதத்திற்கு ஏற்றவாறு, மறுமையில் சன்மானம் அல்லது தண்டனை அடைவர் என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாணயமான கொள்கைகள் முற்றிலும் உண்மையானவை என்றும், தேவனின் பிள்ளையின் தனிப்பட்ட ஒழுக்கத்திற்கு அவைகளை முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

## வேதாகமம் மட்டுமே.

என்ற போதிலும், சுவிசேஷம் ஏவப்பட்டு எழுதப்பட்டவை என்று நாங்கள் விசுவாசிப்பது மட்டுமல்லாமல், மத சம்பந்தப்பட்ட காரியங்களில் வேதாகமம் மட்டுமே நமது ஒரே வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். தேவ செய்தியை மாற்றுவதற்கு எதிராக, அடிக்கடி தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கிறது. (கலாத்தியர் 1:6-9 வசனங்களைப் பார்க்க). கிறிஸ்து மட்டும் எங்கள் கோட்பாடு, வேதாகமம் மட்டுமே எங்கள் வழிகாட்டும் நூல். எனவே, மாறான எந்த மதக்கோட்பாடுகளையோ, மறை நூல்களையோ, ஒழுங்குகளை யோ, கொள்கைகளையோ நாங்கள் பின்பற்றுவதில்லை.

## திரும்பிச் செல்வோம், சீர்திருத்தம் வேண்டாம்

மத உலகம் பெரிதும் பிளவுபட்டிருப்பதை சிந்திக்கும் திறன் படைத்த மக்கள் தெளிவாக அறிய முடியும். மதத்திலுள்ள பல நாணயமான, உண்மையான மக்கள் தவறான போதனைகளையும்,

பாரம்பரியங்களையும் திருத்த, தற்போதுள்ள மத அமைப்புகளை சீர்திருத்தம் செய்ய முன் வந்துள்ளனர். அவர்களுடைய அக்கரைக்காக அவர்களைப் பாராட்டும் அதே வேளையில், அவர்களுடைய முயற்சிகள் அனைத்தும் மேலும் பிரிவினைகளை அதிகப்படுத்துவதில் தான் முடிந்திருக்கிறதே தவிர, ஒற்றுமை உருவாக்குவதில் அல்ல என்பதைக் கூற வேண்டியதாயிருக்கிறது.

என்ற போதிலும், கிறிஸ்துவின் சபையார் அப்போஸ்தலக் கிறிஸ்தவத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டுகோள் விடுக்கிறார்களே தவிர, இன்றுள்ள மத அமைப்புகளை 'சீர்திருத்தம்' செய்ய அல்ல. புதிய ஏற்பாட்டுச் சபை சரியானது என்பதை எல்லாரும் ஏற்றுக் கொள்ளக் கூடும் என்பதால், சகல அம்சங்களிலும் அதே சபையை மீண்டும் புதுப்பிக்க இன்று நாங்கள் பணியாற்றுவது தவறாக இருக்க முடியாது. இருபதாம் நூற்றாண்டில் பல காரியங்கள் மாறிவிட்ட போதிலும், இயேசுவினுடைய மற்றும் அவருடைய அப்போஸ்தலருடைய உபதேசங்கள் மாறவில்லை. சத்தியம் முழுமையானது, அது மாறாதது! தேவனுடைய வசனமே சத்தியம் (யோவான் 17 : 17). முதல் நூற்றாண்டில் அது எவ்வளவு நிச்சயமாக இரட்சிப்பு அளிக்க முடிந்ததோ, அதே போல இன்றும் இரட்சிக்க முடியும். "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8 : 32)

கிறிஸ்துவின் சபைகளில் ஒன்றிற்கு நீங்கள் சென்றீர்கள் என்றால், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு "ஆவியோடும் உண்மையோடும்" (யோ 4:24) தேவனை ஆராதித்தார்களோ, அதே போல அவர்கள் ஆராதிப்பதை நீங்கள் காண்பீர்கள். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கர்த்தரின் பந்தி அல்லது அப்பம் பிட்குதலில் (அப். 20 : 7) அவர்கள் கலந்து கொள்ளுவதையும், இசை கருவிகள் இல்லாமல் வாய்ப்பாடல்களுடன் துதிப்பதையும் (எபே 5:19); ஜெபம் செய்வதையும் (1 தெசெ. 5 : 17) தேவனின் வசனங்களைப் படிப்பதையும் (அப். 20 : 7), வாரத்தின் முதல் நாளில் காணிக்கை செலுத்துவதையும் (1 கொரி. 16 : 2) புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் செய்தது போல இவர்கள் செய்யக் காண்பீர்கள். அதேபோல, பிற ஒவ்வொரு காரியத்திலும் - ஆளுகை அமைப்பு, ஊழியப் பணி, அன்றாட அலுவல், உபதேசம் - புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தைப் புதிப்பிக்க கிறிஸ்துவின் சபையார் முயற்சிக்கின்றனர்.

## ஒரு கிறிஸ்தவனாக மட்டும் இருப்பது எப்படி?

"இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?" (அப். 16 : 30) என்ற வேதாகமக் கேள்விக்குப் பதிலளிக்கையில், சில காரியங்களில் மனிதர்கள் முரண்படுகின்றனர். மத சம்பந்தமான காரியங்கள் சகலவற்றிற்கும் பதில் காண நாம் சுவிசேஷத்தினிடம்

தான் செல்லவேண்டும். நமது பாவங்களுக்காக கிறிஸ்து இரத்தத்தைச் சிந்தினார் என வேதாகமம் போதிக்கிறது. (மத். 26 : 28). அந்த இரத்தமின்றி நாம் இரட்சிக்கப்பட முடியாது. (எபி. 9 : 22). ஆனால், அந்த தியாகத்தை நமதாக்கிக் கொள்ள வேண்டுமானால், இயேசு நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்? இயேசுவானவர் "ஆண்டவரும் கிறிஸ்து"வுமாக இருக்கிறார் என்று கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவர்கள் "நிச்சயமாய் அறிந்து கொள்ள" அல்லது விசுவாசிக்க வேண்டும் எனக் கூறப்பட்டது (அப். 2 : 36). இதை உண்மை என நம்பியவர்கள், மேலும் இது பற்றி அறிய விரும்பினார்கள். அவர்களுக்கு "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்," (அப். 2 : 38) என சொல்லப்பட்டது. மேலும், சுவிசேஷம் சொல்லும் திருமுழுக்கைப் பெறும் தகுதியை, ஒருவன் அடைய இயேசு தேவனின் குமாரன் என்ற தனது விசுவாச அறிக்கையை செய்ய வேண்டும். (மத். 10:32; ரோமர் 10:10) அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் காணப்படும் மனந்திரும்புதல்கள் அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மக்கள் இயேசுவை தேவனின் குமாரன் என விசுவாசிக்க வேண்டும் என்றும், அந்த விசுவாசத்தை அறிக்கையிட வேண்டுமென்றும், தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கடந்த கால பாவங்கள் எல்லாம் மன்னிப்படைய திருமுழுக்குப் பெற வேண்டுமென்றும் போதிக்கிறதைக் காணலாம். இவைகள் அனைத்தையும் செய்பவர்களை கர்த்தர் தமது சரீரமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். (அப். 2:47). பின்னர் அவர்கள் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் உடைய (எபே. 1:3) "கிறிஸ்துவுக்குள்" இருக்கின்றனர். (கலா. 3 : 27).

ஆரம்ப கால சீடர்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாக மட்டும் இருந்தனர். நாம் 1900 வருடங்களுக்குப் பின்னர் வாழ்ந்த போதிலும், வேதாகமத்தை மட்டுமே நாம் பின்பற்றினால் நாமும் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்கலாம். இந்த வேண்டுகோளை அக்கரையுடன் பரிசீலனை செய்ய உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

**கிறிஸ்துவின் சபை ஆராதனைகள் அனைத்திலும் உங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். எமது இலவச அஞ்சல்வழி வேதாகமப் பள்ளியில் சேர்ந்து பயனடைய இந்த சந்தர்ப்பத்தில் உங்களை வரவேற்கிறோம்.**

**- ஆசிரியர்.**

## புதிய ஏற்பாட்டில் சபை என்பது கீழ்க்காணும் மறு பெயர்களையும் கொண்டது.

| | |
|---|---|
| தேவனுடைய ஆலயம் | கொரி. 3 : 16 |
| கிறிஸ்துவின் மணவாட்டி | எபே. 5 : 21 - 32 |
| கிறிஸ்துவின் சரீரம் | கொலோ 1:24, எபே. 1:22,23 |
| தேவனுடைய ராஜ்யம் | கொலோ. 1 13 |
| தேவனுடைய வீடு | 1தீமோத் 3 : 15 |
| முதற்பேறானவர்களின் சங்கம் | எபி. 12 : 23 |
| கிறிஸ்துவின் சபை | ரோம. 16 : 15 |

## வேதாகமத்தில் சபை உறுப்பினர்கள் பின்வரும் பெயர்களால் அழைக்கப்பட்டார்கள் :

| | |
|---|---|
| அங்கத்தினர்கள் | 1கொரி. 12 : 27 |
| சீஷர்கள் | அப். 6 : 1 |
| விசுவாசிகள் | அப் 5:14, 6 : 15 |
| பரிசுத்தவான்கள் | அப். 9 : 13 ரோமர் 1: 7 |
| ஆசாரியர்கள் | 1பேது 2 : 9, வெளி. 1 : 16 |
| கிறிஸ்தவர்கள் | அப். 11:26, 26 : 28, 28, I பேது, 4 : 16 |

# மனிதனுடைய கேள்விகளுக்கு, தேவனுடைய பதில்கள்

மத சம்பந்தமாக மனிதன் பல கேள்விகளைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறான். ஒரு பிரட்சனை என்ன வென்றால், பதில் கிடைக்க அவன் தவறான இடங்களுக்குச் செல்லுவதுதான். இது காரியங்களை சிக்கலாக்கி, மேலுமாக குழப்பங்களை உண்டு பண்ணி, கேள்வி கேட்பவரை ஏமாற்றமடையச் செய்து விடுகிறது. அப்படியானால், பிரட்சனைக்கு தீர்வுதான் என்ன? மிக எளிதான ஒரு வழி இருக்கிறது. தேவனையே கேள்விகளுக்குப் பதில் சொல்ல அழைப்பது தான் அவ்வழி. வாருங்கள்! இன்றைய சில முக்கியமான கேள்விகளுக்கு தேவனுடைய பதில்கள் என்ன வென்று பார்ப்போம். பின்னர், உங்களுடைய பிற கேள்விகள் யாவற்றிற்கும் தொடர்ந்து பதில்களை அறிந்து கொள்ள தேவனுடைய வசனமாகிய வேதாகமத்திற்குச் செல்லுங்கள் :

**1. மனிதனுடைய கேள்வி** : **"பாவம் என்றால் என்ன?"**

**தேவனுடைய பதில்** : **"பாவஞ் செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறு கிறான்; நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" - (1யோவான் 3:4)**

**2. மனிதனுடைய கேள்வி** : **"பாவி யார்?"**

**தேவனுடைய பதில்** : **"எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி"-(ரோமர் 3:23)**

**3. மனிதனுடைய கேள்வி** : **"பாவத்தின் விளைவு என்ன?"**

**தேவனின் பதில்** : **"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் -" (ரோமர் 6:23)**

**4. மனிதனுடைய கேள்வி** : **"மனிதன் நித்திய ஜீவனை இழந்து போக வேண்டுமா?"**

**தேவனுடைய பதில்** : **"தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய்**

| | | |
|---|---|---|
| | | உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16) |
| 5. மனிதனின் கேள்வி | : | "விசுவாசம் எப்படி வருகிறது?" |
| தேவனின் பதில் | : | "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனு டைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17) |
| 6. மனிதனின் கேள்வி | : | "விசுவாசம் மட்டும் இரட்சிக்குமா?" |
| தேவனின் பதில் | : | "ஆதலால், மனிதன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமனாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" (யாக் கோபு 2:24) |
| 7. மனிதனின் கேள்வி | : | "இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?" |
| தேவனின் பதில் | : | "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்" - (மாற்கு 16:16) |
| 8. மனிதனின் கேள்வி | : | "திருமுழுக்கு என்றால் என்ன?" |
| தேவனின் பதில் | : | "ஞானஸ்நானத்திலே (திருமுழுக்கு) அவரோடே கூட அடக்கம் பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரி லிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்த வர்களாகவும் இருக்கிறீர்கள்." (கொலோ 2:12) |
| 9. மனிதனுடைய கேள்வி | : | "ஒருவன் கிறிஸ்துவுக்குள் எப்படி வருகிறான்?" |
| தேவனின் பதில் | : | "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத் தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (கலா 3:26,27) |

10. மனிதனின் கேள்வி : "சபையைக் கட்டியது யார்?"

தேவனின் பதில் : "மேலும் நான் (இயேசு) உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத் 16:18)

11. மனிதனின் கேள்வி : "சபையின் அஸ்திபாரம் யார்?"

தேவனின் பதில் : "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத் தைப் போட ஒருவனாலும் கூடாது" - (1 கொரிந்தியர் 3:11)

12. மனிதனின் கேள்வி : "சபை என்றால் என்ன?"

தேவனின் பதில் : "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லா வற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்."-(எபேசியர் 1:22,23)

13. மனிதனின் கேள்வி : "சபை முக்கியமா?"

தேவனின் பதில் : "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக் கிறது போல, புருஷனும் மனை விக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபேசியர்5:23)

14. மனிதனின் கேள்வி : "எத்தனை சபைகள் இருக் கின்றன?"

தேவனின் பதில் : ". . . ஒரே சரீரம் . . . உண்டு . . ." (எபே. 4:4) "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர். . ." (கொலோ 1:18)

15. மனிதனின் கேள்வி : "ஒருவர் சபையில் சேர்ந்து கொள்ள முடியுமா?"

தேவனின் பதில் : ". . . இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்." (அப். 2:47)

16. மனிதனின் கேள்வி : "பெயரில் ஏதாவது இருக்கிறதா?"

தேவனின் பதில் : "அவராலேயன்றி வேறொருவரா லும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனிதர்களுக் குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை. . ." (அப். 4:12)

17. மனிதனின் கேள்வி : "கிறிஸ்தவனிடமிருந்து எதிர் பார்க்கப்படுவது என்ன?"

தேவனின் பதில் : ". . . நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி. 2:10)

18. மனிதனின் கேள்வி : "பரலோகத்திற்குச் செல்ல பல வழிகள் உண்டா?"

தேவனின் பதில் : ". . . நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவி னிடத்தில் வரான்" - (யோவான் 14:6)

19. மனிதனின் கேள்வி : "கிறிஸ்து மீண்டும் எப்போது வருவார்?"

தேவனின் பதில் : "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என்பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்." (மத்தேயு 24:36)

20. மனிதனின் கேள்வி : "இரண்டாவது சந்தர்ப்பம் ஒன்று உண்டா?"

தேவனின் பதில் : "அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதி மான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என் றார்" (மத்தேயு 25:46)

தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் அமையாவிட்டால், அந்த மதத்தைப் பற்றி, சபையைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படவேண்டும்? தேவனுடைய வசனமே சத்தியம் அவருடைய வசனத்திற்கு ஒரு புது மரியாதை அளிப்பதின் தொடக்கமாக இது அமையட்டும். ஏனெனில், இறுதியில் அவருடைய வசனமே நம்மை நியாயந் தீர்க்கப் போகிறது. (யோவான் 12:48)

J.C. சோட்

# கிறிஸ்துவைப் பின்பற்றி நட

கிறிஸ்துவின் சபையின் ஒரு மிகச்சுவையான பிராந்திய சபையைப் பற்றிய செய்தியை சில நாட்களுக்கு முன்பு படித்துக் கொண்டிருந்தேன். அங்கே நிறைய பிரசங்கிமார்கள் இருப்பதாகத் தெரிகிறது. உண்மையைச் சொல்லப்போனால், அந்தப் போதகர்களில் எவரேனும் ஒருவர், எந்த சமயத்திலாவது எழுந்து நின்று, ஏற்கனவே போதித்துக் கொண்டிருப்பவர தனது பிரசங்கத்தை முடிக்கக் கூட காத்திருக்காமல், போதிக்கக் கூடும். அதே சமயத்தில், அங்குள்ள பல பாடல் நடத்தும் சகோதரர்கள் தாங்கள் விரும்பும் வேளையில் பாடல்களை தொடங்குகின்றனர், அங்கே ஏற்கனவே ஒருவர் போதித்துக் கொண்டிருந்தாலும் சரி, அல்லது ஒருவர் பாடலை நடத்திக் கொண்டிருந்தாலும் சரி, இந்த தன்னிச்சையான செயல்பாடுகள் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் ஒரு ஜெபத்தைக் கூட சட்டை செய்யாமல் அதையும் ஊடுருவிச் செல்லக் கூடும்!

அந்தச் சபையின் பின்னணியில் நெருங்கிச் சென்று கவனிக்கும்போது அவர்களுடைய உண்மையான பிரச்சனைகள் எங்கே இருக்கின்றன எனத் தெரியவரும். இந்த கிறிஸ்தவர்கள் இணைந்து செயல்படுபவர்கள் அல்ல! இந்த சபையில் பல குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவும் அடுத்ததை வெறுப்புடனும் ஏளனமாகவும் கருதுகிறது. இங்கே சிலர் வெகு திறமையான பிரசங்கிமார்களாகவும், மற்றும் சிலர் திறமையுள்ள மூப்பர்களாகவும் உதவிக்காரர்களாகவும் இருக்கிறார்கள் என்றாலும் ஒரு குழுவும் மற்ற ஒன்றுடன் இணைந்து போவதில்லை. அவர்களுடை கூட்டங்களிலும் ஊழிய வேலைகளிலும் எவ்வளவு தூரத்திற்குக் குழம்பிப்போய் இருக்கிறார்கள் என்றால், சமுதாயத்தையே நிலைகுலைய வைக்கும் ஒரு கற்பழிப்பு விவகாரத்தைக்கூட சகித்துக் கொள்வதில் இவர்கள் பெயர் போனவர்கள். இந்தச் சபையை சுற்றிலுமுள்ள ஒழுக்கக் கேடான சமுதாயம்கூட இதன் நடவடிக்கைகளை சகிப்பதில்லை.

வாருங்கள் . . . கொரிந்து பட்டணத்தின் கிறிஸ்துவின் சபைக்குப் போகலாம். மேலே கூறிய சகல பிரட்சனைகளுடன் கூட இன்னும் அதிகமாகவும் இந்த சபையைப் பீடித்திருந்தன. இப்பிரட்சனைகளைப் பற்றிக்கூற பவுல் தனது முதல் நிருபத்தை கொரிந்தியருக்கு எழுதுகிறார். அவ்வாறு செய்கையில், அவற்றிற்கான பல தீர்வுகளையும் அந்த அப்போஸ்தலர் தெரிவிக்கிறார்.

கீழே காணுவது அத்தீர்வுகளில் ஒன்று : "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்." (1 கொரி. 11 : 1). தான் இயேசுவைப் பின்பற்றி நடப்பது போலவே, அவர்களும் தன்னைப் பின்

பற்றி நடக்க வேண்டுமென பவுல் அந்த சபைக்குக் கூறினார். இயேசு வாழ்ந்ததைப் போன்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்தால் கொரிந்து பட்டணத்தின் பிரட்சனைகள் தோற்றுப் போகும் என பவுல் அறிந்திருந்தார். இயேசு வாழ்ந்ததைப் போன்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்தால் சாத்தானுடைய திட்டங்கள் யாவும் தவிடு பொடியாகிவிடும். இயேசு வாழ்ந்ததைப் போல ஒரு வாழ்க்கை வாழ்ந்தால், சகல சந்தர்ப்பங்களிலும் தேவனை திருப்திப்படுத்துவதோடு, எந்த சபைக்காவது பிரட்சனைகள் ஏற்படும்போது அவை தீர்வு காணப்படும்.

## அவருடைய கருணையைப் பின்பற்றி நட

தன்னைச் சுற்றியுள்ள சகல மக்கள் பேரிலும் இரக்கஞ் செலுத்தும் உன்னதமான ஒரு குணநலனைப் பெற்றிருந்தார் இயேசு. "அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால் படியிட்டு; உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக் கொண்டான். இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு : எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்". (மாற்கு 1:40-41). தொழு நோயாளிகளைத் தொடுவது தீங்கானச் செயல் என்றும், மூடத்தனமானது என்றும் கருதப்பட்டது. தொழுநோயாளியைத் தொடும் மனிதனை அது சட்டப்படி தீட்டுப்படுத்துவதால் அது தீங்கானது எனக் கூறப்பட்டது. அது தொற்றிக் கொள்ளும் என்பதால், தொடும் மனிதனை மூடன் எனக் கருதியது. ஒருவேளை, வருடக் கணக்காக யாராலும் தொடப் படாதிருந்த ஒரு மனிதனிடம் நெருங்கிய இயேசு இந்த இரண்டு ஆபத்துக்களையும் சந்திக்கத் தயாராகவிருந்தார். ஒரு குழந்தையோ அல்லது ஒரு மனைவியோ அவனை அணைத்திருந்தில்லை. யாருடைய கைகளையும் அவன் குலுக்கியதில்லை. மனித தொடர்பற்று அவன் கடத்தியகாலம் எவ்வளவு என யாருக்கும் கணக்குத் தெரியாது! ஆனால், தொலைவில் காணும் போதே, அவனை சுகமாக்க வேண்டுமென்ற மிகுந்த இரக்கம் இயேவுக்கு ஏற்பட்டது. அவனை சுகப்படுத்த வேண்டி அவர் அவனைத் தொட்டார்.

இதே போன்ற ஒரு அன்புதான் கடைசி இராப்போஜன வேளையில் இயேசுவை மனமிளக வைத்தது. "போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக் கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சிஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். "(யோவான் 13:4-5). அவருடைய சீடர்களின் தேவைகளை இயேசு புரிந்தார். தங்களில் யார் பெரியவன், யாருக்குப் பதவி என்ற அவர்களுடைய வாக்கு வாதங்களைப் பற்றி அவர் அறிந்தார். அன்பு எதைச் செய்யக் கூடும் என்பதை

அவர்கள் காணவேண்டுமென அவர் விரும்பினார். தனது நிலையை விட்டு இறங்கி, தன்னைத் தானே தாழ்த்தி, பிறருக்கு ஊழியஞ் செய்யும் அளவிற்கு அன்பால் அவர் அசைக்கப்பட்டிருந்தார். என்றாலும், மக்களோ அவருடைய நடவடிக்கைகளை பாராட்டவோ புரிந்து கொள்ளவோ இல்லை.

இந்த வழியில் கிறிஸ்துவைப் பின்பற்றி நடந்தால் கொரிந்தியருடைய எல்லா பிரட்சனைகளும் தீர்ந்து போயிருக்கும். அவர்களுடைய சொந்த தேவைகளையும் தாண்டி காணும்படி, ஒருவேளை பிறருடைய தேவைகளைப் புரிந்து கொள்ளும்படி, கருணையானது அவர்களைக் கட்டாயப்படுத்தியிருக்கும் அன்பு அவர்களிடம் பணிவை ஏற்படுத்தி, ஆராதனை வேளைகளில் அவரவருடைய நேரம் வரும் வரை காத்திருக்கச் செய்திருக்கும். அன்பு அவர்களுடைய நலிந்த சகோதரர்களிடம் இரக்கத்துடனும் மிருதுவாகவும் அவர்களை நடக்கச் செய்திருக்கும்.

இந்த வழியில் கிறிஸ்துவைப் பின்பற்றி நடந்தால் இன்றும் கூட சபையிலுள்ள பிரச்சனைகள் தீர்ந்து போகும் உதவாக்கரைகளையும், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்களையும் கூட சிந்திக்கும் சிரமங்களை சபை அங்கத்தினர்கள் எடுத்துக் கொண்டால், ஒருவேளை சபை வளர்ச்சிக் குறைவு என்ற பிரட்சனை தீர்ந்து போகும் பிற அங்கத்தினர்களுடைய (குறிப்பாக நமது செயலை ஒருபோதும் பாராட்டாதவர்கள் அல்லது புரியாதவர்கள்) "கால்களைக்கழுவ" அங்கத்தினர்கள் வகை தேடினால், ஒருவேளை சபை சண்டைகள் தீர்ந்து போகக் கூடும். எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய நிலைமையை விட இயேசுவின் இரக்கமே அவருடைய வாழ்க்கையில் அதிக வல்லமையுள்ளதாக இருந்ததை மக்கள் பார்க்க முடிந்தால், ஒருவேளை இன்றைய கிறிஸ்தவர்கள் பணிவுடன் நடக்கக் கற்றுக் கொள்ளக் கூடும்.

## அவருடைய பணிவைப் பின்பற்றி நட

தான் இயேசுவைப் பின்பற்றி நடப்பதைப் போல, கொரிந்தியர்கள் தன்னைப் பின்பற்றி நடக்க வேண்டுமென பவுல் கேட்டுக் கொண்டபோது, தேவனுடைய விருப்பத்திற்கு கர்த்தர் தொடர்ந்து பணிவுடன் நடந்து வந்ததை நினைவில் கொண்டிருக்க வேண்டும். இயேசு திரு முழுக்கு பெற்ற போது, யோவான் இயேசுவை தண்ணீரில் முழுக்க விருப்பமற்றவராகக் காணப்பட்டார். இயேசு பரிசுத்தமானவர் என்றும் திருமுழுக்கு அவருக்குத் தேவை அற்றது என்பதும் யோவானுக்குத் தெரிந்திருந்தது. "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார்."(மத் 3:15) மன்னிக்கப்பட வேண்டிய காரணத்திற்காக யோவானிடம் இயேசு செல்லவில்லை. மாறாக, திருமுழுக்கு செய்யப்பட வேண்டிய சரியான காரியம் என அவர் கருதியதால் சென்றார்

பிறருக்கு அது அர்த்தமற்ற செயலாகத் தோன்றிய போதிலும், எது சரியோ அதைச் செய்வதில் இயேசு எப்போதுமே நிலைத்திருந்தார். பிறர் என்ன எண்ணினார்கள் என்றோ, அல்லது தனக்கு எவ்வித பாதிப்பு ஏற்படுமென்றோ கருதாமல், கர்த்தர் சகல காரியங்களிலும் தேவனுக்குப் பணிந்து கொள்ள இருந்தார்.

கெத்சேமனே தோட்டத்தில், பணிவு நிலை மிகவும் தெளிவாகக் காணப்படுகிறது. "அப்பொழுது அவர் என் ஆத்துமா மரணத்துக் கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி, விழுத்திருங்கள் என்று சொல்லி சற்று அப்புறம் போய், தரையிலே விழுந்து, அந்த வேளை தம்மை விட்டு நீங்கிப் போகக் கூடுமானால் அது நீங்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டு அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத் திலிருந்து எடுத்துப்போகும்; ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்றார்." (மாற்கு 14:34-36) தன்னை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் மரணத்தைப் பற்றி இயேசு கலங்குகிறார். அடுத்து, தனக்களிக்கப்பட்ட பணிபற்றி இன்னும் அவர் முடிவெடுக்க முடியவில்லை. இம்மரணத்திலிருந்து தன்னை விடுவிக்கக்கூட அவர் வேண்டுகிறார். ஆனால், தன்னை விடுவிக்கக் கோரும் வேளையிலும், தேவனுடைய சித்தத்தின் படியே அவர் நடக்க வேண்டுமென விரும்பினார். தன்னுடைய விருப்பங்களுக்கு இடங் கொடுக்கவில்லை; இதோ, தேவனுக்கு அவர் கீழ்ப்படியப் போகிறார்.

இந்நிலை சபையின் ஒவ்வொரு பிரச்சனைக்கும் சரியாகப் பொருந்தவில்லையா? எது சரியோ அதை மட்டுமே விசுவாசிகள் செய்யக் கூடுமானால், கொரிந்திய சபைப் பிரச்சனைகள் போன்றவை மறைந்து விடும். தாங்கள் விரும்புவதைச் செய்வதற்குப் பதிலாக, தேவனுடைய விருப்பத்திற்கு மட்டும் விசுவாசிகள் பணிந்து நடந்தால், சபை சண்டைகள் யாவும் மறையும். பொறாமை பிடித்து அலைவது, குரூரமாக நடப்பது, கோள் மூட்டுவது போன்ற செயல்கள் எல்லாம் சரியானவை என நம்பும் கிறிஸ்தவன் எங்கும் இல்லை எது சரியோ அதை மட்டும் நாம் செய்தால், மற்றவர்களை சரியானவர்கள் என கருதுவோம்! ஒவ்வொருவரையும் சரியாக நடத்தாத கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பின்பற்றி நடப்பவர்கள் அல்ல; மாறாக அவர்கள் சாத்தானைப் பின்பற்றுகிறவர்கள்.

## வீழ்ந்து போனவர்களிடம் அவர் காட்டும் அன்பை பின்பற்றி நட

தங்களுக்குள்ளேயே எப்போதும் தர்க்கம் பண்ணிக் கொண்டு எவ்வாறோ கொரிந்தியர்கள் ரெம்பவும் சுறுசுறுப்பாக இருந்தனர். இவர்கள் செய்து கொண்டிருந்த தர்க்கம், இழந்து போன மக்களைக் கூட சந்திக்க விடாமல் இவர்களை திசை திருப்பியிருக்க வேண்டும். வீழந்து போனவர்களை இரட்சிக்கும் அவருடைய பணியைச்

செய்ய, பாரம்பரியங்கள் தடையாக நிற்க இயேசு ஒருபோதும் அனுமதித்தில்லை என்பது அவருடைய ஒரு பெரிய குணநலன். இது அவருடைய அன்பால் விளைந்தது. "....அநேக ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, அநேக காரியங்களை (இயேசு) அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். "(மாற்கு 6:34) அவர்களுடைய நிலைக்காக இரக்க உணர்வு இல்லாமல் இயேசு வீழ்ந்து போனவர்களை ஒருபோதும் கண்டதில்லை. இந்த வேளையில், தனது சீடர்களுடன் தான் தனித்திருக்க அவர் முயற்சித்தார். இருந்தபோதிலும், மக்கள் கூட்டம் அவரைப் பின்பற்றிய வேளையில், அவர்களுக்குப் போதிக்கவும் உணவளிக்கவும் இயேசு தனது நேரத்தை செலவிட்டார். தனது பணி வாழ்க்கையில் வழிகாட்டுதல் இல்லாத இதே போன்ற மக்களுக்காக என்பதை இயேசு அறிந்தார்.

மதவாதிகளிடம் தனது மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளுவதைக் காட்டிலும், வீழ்ந்து போனவர்களை மீட்கும் தாகம் இயேசுவுக்கு அதிகமாக இருந்தது. ". . . சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் என்றார். அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான். அதைக் கண்ட யாவரும் : இவர் பாவியான மனிதனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்." (லூக்கா 19:5-7) கிறிஸ்துவை கண்டால் மட்டும் போதும் என்ற ஆசையில் ஒரு மரத்தின் மேல் ஏறி அமர்ந்திருந்த சகேயுவை இயேசு கண்டார். போதகர் அவனைக் கண்டு மகிழ்ச்சியுற்றார்; அவனுடைய வீட்டிற்குப் போனார்; அவனுடைய மேஜையில் உணவருந்தினார். இயேசுவின் இச்செயல் மதவாதிகளின் மத்தியில் காரசாரமான வாக்குவாதங்களை ஏற்படுத்திற்று. தேவனை உண்மையாக பின்பற்றுகிறவர் இத்தகைய காரியத்தை செய்ய மாட்டார் என அவர்கள் எண்ணினர். ஆனால், பாரம்பரிய எண்ணங்கள் தனது பணியைத் தடுக்காத அளவு, இயேசு வீழ்ந்து போனவர்களை அதிகமாக நேசித்தார். அவர் கூறுவது போல, "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனிதகுமாரன் வந்திருக்கிறார் என்றார்." (லூக்கா 19:10) ஒரு பாவியின் வீட்டில் உணவருந்த அவர் அமர்ந்த போது, தான் சார்ந்திருப்பது இப்படிப்பட்ட இடத்தையே என இயேசு விளக்குகிறார்!

இயேசுவின் இந்த நிலையை கிறிஸ்தவர்கள் இன்று பின்பற்றி நடப்பது நல்லது. வீழந்து போனவர்களை தேடும் போது அதற்குத் தடையாக வரும் எந்த எண்ணத்தையோ, பாரம்பரியத்தையோ, நிலையையோ நாம் விலக்கி விட வேண்டும். எல்லா காரியங்களிலும் தேவனுடைய விருப்பத்திற்கு நாம் நம்மை அர்ப்பணிக்கும் போது பாவிகளைத் தேடி நாம் செல்லுவதைத் தடை செய்யும் நமது எண்ணத்தையும் பாரம்பரியத்தையும் ஒதுக்கித்தள்ள

நாம் கற்றுக் கொள்வோம். இரட்சகரின் அறை கூவலுக்கு இழந்து போனவர்கள் செவி சாய்ப்பதைத் தடுத்திடும் எந்த மனித சக்திகளையும் நாம் ஒதுக்கித் தள்ளுவோம். நமது பாரம்பரியங்களை விட இழந்து போனவர்களை இரட்சிப்பது மிகவும் முக்கியமான தென்று தனது வாழ்க்கை முறை வழியாக இயேசு நமக்கு கற்பித்தார்.

## அவருடைய மரணத்தைப் பின்பற்றி நட

இயேசு சிலுவையை விரும்பி ஏற்றுக் கொண்டார். பிறர் பேரிலுள்ள அன்பால் அதைச் செய்தார். தேவன் அதைக் கட்டளையிட்டபடியால் அவர் அதைச் செய்தார். இழந்து போனவர்களைக் கண்டு பிடிக்க அதைச் செய்தார். இதே போன்ற மரணத்திற்கு நாம் ஒவ்வொருவரும் நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என இப்போது இயேசு கூறுகிறார்.''. . . ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்.'' (மத் 16:24) அவர் செய்தது போல நாமும் செய்ய, அவர் அடிச் சுவட்டை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டுமென இயேசு கேட்கிறார். தேவனு டைய விருப்பத்திற்குப் பணி வதாலும், நமது தேவைகளை மறுப்பதாலும் இதை நாம் செய்கிறோம். மக்களை நேசிப் பதாலும் வீழ்ந்து போனவர் களைத் தேடுவதாலும் நாம் இதைச் செய்கிறோம். என்றா லும், தன்னைத் தானே வெறுப்பதின் மூலமும், சுய மரணத்தின் மூலமும் தான் இந்த நடைமுறை தொடங்குகிறது.

இந்நடைமுறை பற்றி பவுல் ரோமர்களுக்குக் கூறுகிறார். ''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவ்வுருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ் நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் பட்டோம். ''(ரோமர் 6:3-4) இயேசுவைப் பின்பற்றி நடப்பது என்றால், மரணத்தை வாழ்வின் வழியென ஏற்றுக் கொள்ளுவது எனப் பொருள். ஆனால் அவர் நம்மிடம் கேட்கும் மரணம் சரீர சம்பந்தப்பட்டதல்ல அது ஆவிக்குரியது. தேவனுடைய விருப்பங்களுக்குப் பணிவதின் மூலமும், (இயேசு எப்போதும் செய்ததைப் போல்), திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுவதின் மூலமும் இந்த மரணம் சம்பவிக்கிறது. ஒருதடவை அவருடைய மரணத்திற்குள் மூழ்கி விட்டால் நீங்களும் ஒரு புது வாழ்வை, இயேசுவைப் பின்பற்றி நீங்கள் நடக்கும் வாழ்வை, அடைய முடியும். இன்றே அவரிடம் வாருங்கள் என அன்புடன் அழைக்கிறோம்!

**டேவிட் தர்மன்**

**எஸ்.எஸ். ராஜன்**

# யெகோவா சாட்சிகள் -1

'வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும், உறைந்த மழையைப் போல் வெண்மையாகும் அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந் தாலும் பஞ்சைப் போலாகும். நீங்கள் மனம் பொருந்திச் செவி கொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். மாட்டோம் என்று எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள். கர்த் தரின் (யெகோவாவின்) வாய் இதைச் சொல்லிற்று. (ஏசா. 1 : 18 - 20).

வல்லமையுள்ள தேவனாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியதாவது: இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் சிலர், (மத். 7, 13, 14)

நீங்களும் நானும் மேற்குறிப்பிட்ட இரண்டு வசனங்களுமே உண்மையென ஒப்புக் கொள்கிறோம் - இரண்டு வாசல்கள், இரண்டு பாதைகள், இரண்டு வகையான கூட்டங்கள் (அவற்றில் செல்வோரின்) இரண்டு முடிவுகள். இதில் உள்ளன என்பதையும் நாம் இருவரும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் நம் இருவரில் யார் எந்தப் பாதையில் செல்கிறோம் என்பதே இப்போதைய பிரச்னை.

உலகில் இன்று எத்தனையோ மதங்கள் உள்ளன. அவைகளில் சில வெளிப்படையாய்க் காணுகின்றன இருப்பினும் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்களும் தாங்களே சரியான பாதையில் நடப்பதாக நம்புகின்றனர். இவர்கள் தங்கள் நம்பிக்கைகளுக்காக உயிர் துறக்கவும் தயாராக உள்ளனர். சில நேரங்களில் தங்கள் மதத்தைவிட்டு பிற மதத்திற்குச் செல்வோரை கொலை செய்வது பாக்கியம் என கருதுகின்றனர்.

மேற்படி மதீ பிரச்சனைகளுக்கு முடிவு காணும் பொருட்டு, சிலர் சமதர்மவாதிகளாகின்றனர். அவர்கள், 'நீங்கள் எதை நம்புகிறீர்கள் என்பது ஒரு பொருட்டேயில்லை, ஆனால் உங்கள் நம்பிக்கை நேர்மையும் உண்மையுள்ளதாயிருக்க வேண்டும்' என்று சொல்லுவதன் மூலம் தங்கள் கருத்தை நியாயப்படுத்துகின்றனர். தங்களை முற்போக்கு சிந்தனையாளர்கள் எனக் கருதிக்கொண்டிருக்கும் இப்படிப்பட்ட மனிதரின் மடமையையே இது காட்டுகிறது. மிக நேர்மையாக நான் மருந்துக்கு பதிலாக விஷத்தை சாப்பிட்டுவிடக் கூடும். ஆனால் என் நேர்மை விஷத்தின் அழிவிலிருந்து என்னை தப்புவிக்காது தவறான ஒரு வண்டியில் பயணம் செய்யும்படி ஏறி உட்கார்ந்து கொண்டு நான் செல்ல

விரும்பிய பாதையில்தான் செல்கிறேன். சரியான (புகை) வண்டியில்தான் பயணம் செய்கிறேன்' என்று நேர்மையாக நினைத்தாலும், அது சரியாக நாம் போக நினைத்த இடத்திற்கு என்னைக் கொண்டு போய்சேர்க்காது.

'கிறிஸ்தவம்' மூன்று பெரும் பிரிவுகளாக இன்று காணப்படுகிறது. அவைகள் கத்தோலிக்கம், புராட்டஸ்ட்டண்டும் அநேக நாமகரம கூட்டமைப்புகளைக் கொண்டவை. (நாமகரணக் கூட்டம் என்பது சபைக்கு சுயப் பெயர்களை சூட்டிக் கொண்டிருக்கிற பிரிவினைக் கூட்டம் என்று பொருள்) சிலர் தாங்கள் எந்த நாமகரண கூட்டமைப்பையும் சார்ந்து ஒத்துபோகக் கூடியவர்களாகவும், வேறு சிலர் தங்கள் கூட்டத்தைத் தவிர வேறு எக்கூட்டமைப்பையும் சாராதவர்களாகவும் காணப்படுகின்றனர். தங்களை புராட்டஸ்ட்டண்ட், கத்தோலிக்கம் என்று கூறிக் கொள்ளாத மார்மன், கடைசி கால பரிசுத்தவான்களின் சபை, ஏழாம் நாள் ஆசரிப்புக்காரர், கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் கூட்டமைப்பு, யெகோவா சாட்சிகள், ஐக்கிய சபைகள், பெந்தகொஸ்தே இயக்கங்கள் போன்றவைகளும் உண்மைக் கிறிஸ்தவத்திலிருந்து விலகிப்போன கூட்டங்கள். இந்தக் கூட்டத்தார்களெல்லாம் தங்களின் முழு நம்பிக்கையிலும் நேர்மையாகவே உள்ளனர். தங்களின் பிரிவு சரியானதென்று நம்புகின்றனர். ஆனாலும் இவர்கள் எல்லாருடைய கூற்றுகளும் சரியானதாக இருக்க முடியாது. ஏனெனில் இவர்கள் ஒருவருக்கொருவர் உபதேசங்களில் பெருத்த வித்தியாசத்தைக் கொண்டுள்ளனர். எனவே மேற்படி கூட்டங்கள் அனைவரும் 'தவறில் நேர்மையானவர்களாக' உள்ளனர்.

வேதம் கூறுகிறது : 'மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு, அதின் முடிவோ மரண வழிகள்' (நீதி. 14 : 12) இன்றும் நாம் ஒவ்வொருவரும் சரியான பாதையில் இருப்பதாக நினைக்கலாம். ஆனால் உண்மையிலேயே அது சரியானதுதானா என்பதுதான் கேள்வி. ஒருவேளை நமது வழி தவறானதாக இருந்துவிட்டால் அது நம்மை அழிவுக்கு கொண்டுபோய்விடக் கூடும் அல்லவா?

நமக்கு முன்பாக அழிவுக்கும் ஜீவனுக்குமான இரண்டு வித பாதைகள் செல்வதாக இயேசு கூறுவதால், (மத். 7 : 13, 14) நாம் சரியான பாதையிலே தான் சென்று கொண்டுள்ளோமா என்பதை நம்மில் ஒவ்வொருவரும் உறுதி செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். பவுல் 'நீங்கள் விசுவாச முள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள் என்று சொன்னார் (2 கொரி 13 : 5)

அனைத்துவித கூப்பாடுகளுக்கும், குழப்பங்களுக்குமிடையே இன்று கிறிஸ்தவம் அல்லாடிக் கொண்டிருக்கும்போது, ஒரு நேர்மையான நபர் எப்படி சரியான வழியைக் கண்டுபிடிக்க

இயலும்? இயேசு கிறிஸ்து துவக்கம் இன்று வரை ரோமன் கத்தோலிக்க சபையே அப்போஸ்தலரின் வழிவந்த 'ஆதி திருச்சபை' என்கின்றனர். உலகமனைத்தும் (வேதத்தின் படி இல்லாமலேயே) ஒரே வித தொழுகை முறையும், உபதேச அமைப்பும் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்துகின்றனர். இது சாத்தியமா? போப்புதான் இயேசு கிறிஸ்துவின் நேரடி முகவர் என நம்புகின்றனர்.

அவர்கள் மட்டுமே சரியானவர்களென்றும், மற்ற யாவரும் தவறானவர்களென்றும் அவர்கள் நம்புகின்றனர் மார்க்க சீர்திருத்தவாதிகள், ரோமன் கத்தோலிக்கத்தின் இருளினின்று ஜனங்களை வெளிக்கொணரவே தேவன் தங்களைப் போன்ற பரிசுத்தவான்களை எழும்பச் செய்திருக்கிறார் என்று நம்புகின்றனர். அநேக பேப்திஸ்து கொள்ளைக்காரர்களும், தங்களை ஒருவகை புராட்டஸ்டண்டுகள் என்று ஒத்துக் கொள்ளாமல், தாங்களே கிறிஸ்துவின் நேரடி அவதாரம் என்ற நினைப்பில் உள்ளனர். மார்மன் சபையார் அதின் ஸ்தாபகராகிய ஜோசப் ஸ்மித் தேவனிடத்திலிருந்து நேரடி வெளிப்பாட்டை பெற்றவராதலால், தாங்களே சரியானவர்கள் என்று கருதுகின்றனர். நேற்று அடித்த மழையில் முளைத்த காளான்களாகிய யெகோவா சாட்சியினரும் தாங்களே சரியானவர்கள் என்றும் மற்ற அனைத்துக் கூட்டங்களும் தவறு என்றும் கருதுகின்றனர்.

அந்தோ பரிதாபம்! சரியான வழி இதுதான் என அறிந்து கொள்ளும் மனிதர் யாரும் உண்டா? இதற்கு பதில் உண்டு! யெகோவாவை ஸ்தோத்தரிக்கிறோம்! அவர் தமது பிள்ளைகளை திக்கற்ற இருட்டில் விடமாட்டார். வேதம் கூறுகிறது, 'வேதத்தையும், சாட்சியாகமத்தையும் வாசிக்க வேண்டும். அதன் படியே பேசாதவனுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" (ஏசாயா. 8 : 20) சரியானது எது என்பதற்கும் தவறானது எது என்பதற்கும் வித்தியாசம் காண வேதமே சரியான அளவுகோல்.

முரண்பட்ட கருத்துள்ள இருவர் ஒரு சுவரைப் பார்த்து அது நேரானது என்றும் இல்லை, அது வளைவானது என்றும் தங்கள் வாழ்நாள் முழுவதும் வாதிட்டுக் கொண்டே இருக்கலாம். இவர்களின் வெறும் வாய்ச்சொல் வாதங்கள் யார் சரி, யார் தவறானவர்கள் என்று ஒருபோதும் முடிவு கட்டாது. ஆனால் அந்த சுவர் நேரானதா, வளைவானதா என அறிய வழியுண்டு ஒரு இரச மட்டத்தைக் கொண்டோ அல்லது தூக்கு குண்டு நூலைக் கொண்டோ அதை எளிதாகத் தீர்க்கமுடியும். இவ் வகையில் யார் கள்ள போதகன் என்பதையும், யார் உண்மை போதகர் என்பதையும் அளவுகோலாகிய வேதமே தீர்மானிக் கட்டும்.

'வழக்காடுவோம் வாருங்கள் என்று யெகோவா சொல்லுகிறார். (ஏசா. 1 : 18)

**- E.A. ஆறுமுகம், திண்டுக்கல்.**

**"தொடரும்"**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, FEBRUARY 1995
FEB 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

# ஓர் அறிவிப்பு

கர்த்தரின் பெரிதான கிருபையால் "திருமறை ஆசான்" அலுவலகத்திற்கு தொலைபேசி இணைப்பு கிடைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டங்கள் ஒழுங்கு செய்தல், திருமணப் பதிவுக்கு அழைத்தல் போன்ற காரியங்களுக்கு கால தாமதத்தைத் தவிர்க்க, தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளலாம்.

- ஆசிரியர்

**தொலைபேசி எண் (04257) 20030**
**தபால் அனுப்ப வேண்டிய முகவரி**
**E.Z.S. ராஜநாயகம்**
**195, கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,**
**காங்கயம் - 638 701.**

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivered Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER - BOOK - POST